Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 255

செவ்வாய்க்கிழமை 08 ஓகஸ்ட் 2023

ஆடி 23 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# பறாளாய் முருகன் வர்த்தமானி அமைச்சரவை நேற்று ஆராய்வு

## அமைச்சர் விதுர கள்ள மௌனம்

## கவனம் செலுத்துவதாக ரணில் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 8**

**பறாளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரத்தை தொல்பொருள் சின்னமாக அறிவித்து வெளியான வர்த்தமானி தொடர்பில் நேற்று மாலை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இதன்போது துறைசார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மௌனம் காத்ததுடன் இது தொடர்பில் கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

»11

## 19க்கும் 54க்கும் காதல்; பறிபோனது உயிர்!

சுன்னாகம், ஓக. 8
பொதுமக்களால் நையப்

»11

## நீரைச் சிக்கனமாக பயன்படுத்துங்கள்

### கிளிநொச்சி மக்களிடம் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 8
வறட்சியான கால நிலை காரணமாக நாளாந்தம் பொது மக்களுக்குத் தேவைப்படும் நீரைச் சுத்திகரித்து வழங்குவதில் நெருக்

»11

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி:

## மதிப்பீட்டறிக்கை மன்றில் இன்று: ஓ.எம்.பி. தலைவரும் வருகை

முல்லைத்தீவு, ஓக. 8
கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வை முன்னெடுக்கத் தேவையான செலவு தொடர்பான மதிப்பீட்டறிக்கை இன்று தயாரிக்கப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்படும் என்று தெரியவருகின்றது. கொக்குத்தொடுவாயில் இனம் காணப்பட்ட

»11

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட

## சிங்கள மீனவர்களைப் பிடித்த தமிழ் மீனவர்கள் சிறையில்

### முல்லைத்தீவில் நேற்றுப் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 8
தண்ணிமுறிப்புக்குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வந்த வெலிஓயாவைச் சேர்ந்த சிங்கள மீனவர்களை இரு தினங்களுக்கு முன்னர் தண்ணிமுறிப்பு மீனவர்கள் பொலிஸாரி

»11





சர்வதேச தமிழியல் மாநாடு

## கலைநிகழ்வுகளால் களைகட்டுகிறது இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 8
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையால், சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசு நிதியத்தின் அனுசரணையில் நடத்தப்படும்

»11

## மோ.சைக்கிள் பழக முற்பட்டவர் மதிலுடன் மோதி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 8
தலைக்கவசம் அணியாத நிலையில் மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதில் காய

»11

## மதுவரிப் பொறுப்பதிகாரியின் வீட்டுக்கு பெற்றோல் குண்டுவீச்சு

சாவகச்சேரி, ஓக. 8
சாவகச்சேரி மதுவரித்திணைக்களப் பொறுப்பதிகாரியின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கீரிமலை,

»11

## வவுனியாவை மிரட்டிய கொள்ளைக் கும்பல் கைது

வவுனியா, ஓக. 8
வவுனியாவில் பல்வேறு இடங்களில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில்

»11

தென்னிலங்கைக் கொள்வனவாளர்களால்

## யாழில் அதிகரிக்கும் காசோலை மோசடிகள்

யாழ்ப்பாணம், ஓக. 8
யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் கடந்த 7 மாதங்களில் பணமோசடிகள் தொடர்பில் 21

»11

வாகனக் கொள்வனவு:

## காசோலை கொடுத்து கம்பி நீட்டியவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 8
மோசடியான காசோலையைக் கொடுத்து வாகனமொன்றைக் கொள்வனவு செய்துவிட்டு தலைமறைவான சந்தேகநபரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

»11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முல்லை. மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை!

## நிவர்த்தி செய்ய நடவடிக்கை மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஓக. 8

**முல்லைத்தீவு மருத்துவமனைகளில் காணப்படும் நிரந்தர மருத்துவ நிபுணர்கள் இன்மை மற்றும் மருத்துவமனைகளின் உள்ளகக் கட்டமைப்பில் தேவைப்படும் அபிவிருத்தி ஆகியவற்றை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில், முல்லைத்தீவு மருத்துவமனைகளில் நிரந்தர மருத்துவநிபுணர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதனால் சிறந்த சேவையை மக்களுக்கு வழங்க முடியாதுள்ளது. அத்துடன் மருத்துவமனைகளின் உள்ளகக் கட்டமைப்பிலும் விரைவான அபிவிருத்தி தேவையாகவுள்ளது.

முல்லைத்தீவு மருத்துவமனையில் காணிப் பிரச்சினை தாமதமடைவதால் கட்டட நிர்மாணம் தடைப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. அரசின் வரிக்கொள்கையில் அதிருப்தியுற்ற மருத்துவநிபுணர்கள் அதிகளவில் நாட்டிலிருந்து வெளியேறுகின்றமையாலேயே இத்தகைய வெற்றிடங்கள் அதிகரித்துள்ளன.

இந்த விடயங்கள் சுகாதார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. விரைவில் விசேட ஆளணியை நியமிப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதாரசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ச-27)

> **அரசின் வரிக்கொள்கையில் அதிருப்தியுற்ற மருத்துவ நிபுணர்கள் அதிகளவில் நாட்டிலிருந்து வெளியேறுகின்றமையாலேயே இத்தகைய வெற்றிடங்கள் அதிகரித்துள்ளன.**

# இலங்கையின் நிர்மாணத்துறை மீண்டும் கட்டியெழுப்பப்படும்!

## ஜனாதிபதி ரணில் உறுதி



கொழும்பு, ஓக. 8

இலங்கையின் வரலாற்றைப் பறைசாற்றும் பெருமைமிக்க நிர்மாணங்களை கடந்த காலத்தில் உருவாக்கிய கட்டடக் கலையின் தரம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதேபோல், எதிர்கால கால நிலை அனர்த்தங்களுக்கு ஈடு கொடுப்பதற்கு உகந்ததான கட்டட நிர்மாணங்கள் இலங்கைக்கு அவசியமாகும். பொருளாதார நெருக்கடியில் வீழ்ச்சியுற்ற நிர்மாணத்துறையைக் கட்டியெழுப்பி சர்வதேச தரத்தில் மீண்டும் உறுதிசெய்யத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

'கட்டடக்கலை: நிலைப்புக்கான தாக்கம்' என்ற தொனிப்பொருளின் கீழ் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கட்டடக் கலைஞர்களின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையை உலக அரங்குக்குக் கொண்டுசென்ற நிர்மாணங்களாக ருவன்வெலிசாய, அபயகிரிய, ஜேதவனாராமய உள்ளிட்டவை காணப்படுகின்றன. சிகிரியா இந்த நாட்டின் பிரமிக்கத்தக்க அதேபோல் வாஸ்து சாஸ்திரத்துக்கு அமைவான நிர்மாணமாகும். பொலநறுவையில் காணப்படும் பிரமிக்கத்தக்க நிர்மாணங்களும் 2 ஆயிரம் வருட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டவையாகும்.

கடந்த இரு வருடங்களில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் கட்டட நிர்மாணத்துறையும் பாதிப்புக்களை எதிர்கொண்டது. நிர்மாணத்துறையில் ஆயிரக் கணக்கானோர் தொழிலை இழந்தனர்.

இந்த நாட்டுக் கலைஞர்கள் உருவாக்கிய தரத்தை மீண்டும் உறுதிப்படுத்த சரியான நகரத் திட்டமிடல்கள் ஊடாக அனைத்து நகரங்களையும் அழகிய நகரங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. கண்டி நகரத்தில் சிறந்த நகரத் திட்டமிடல் ஒன்றை மீண்டும் முன்னெடுப்பதற்காக ஜப்பான் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவுள்ளோம்.

அந்த நகரத் திட்டமிடலை பேராதனை வரையில் விரிவுபடுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

# வறட்சியால் ஏற்பட்ட பயிரழிவை மதிப்பிடுக

## விவசாய அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஓக. 8

நாடெங்கிலும் கடும் வறட்சியால் ஏற்பட்டுள்ள பயிரழிவுகளை மதிப்பிடுமாறும், அதற்கேற்ப இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் வடமத்திய மாகாண விவசாயப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் அமைச்சரால், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பயிர்ச் சேதத்துக்கான இழப்பீடாக ஹெக்டேயருக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கினாலும் போதாது என்பதால் அதனை அதிகரிக்க வேண்டும் என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (ம)

# இலங்கையில் சச்சின்

இந்தியக் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின், யுனிசெப் அமைப்பின் நல்லெண்ணத் தூதுவர் என்ற முறையில் இலங்கைக்கு நேற்று திங்கட்கிழமை பயணம் மேற்கொண்டார்.

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள பாடசாலையொன்றுக்குச் சென்ற அவர், இலங்கையில் கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து பல்வேறு கலந்துரையாடல்களை நிகழ்த்தினார். (ம)



# கைதுகள்



யாழ்ப்பாணம், ஓக. 8

கோண்டாவில் கிழக்கு சுன்னாகம் பகுதியில் உடைமையில் கசிப்பை வைத்திருந்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாகக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே பொலிஸாரால் 38 வயதான அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இருந்து 15 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-125)

யாழ்ப்பாணம், ஓக. 8

போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் 20 வயதுடையவர் என்றும் அவரிடம் இருந்து 40 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-125)

# வவுனியா சிறைச்சாலை கட்டுப்பாடுகள் நீக்கம்!

வவுனியா, ஓக. 8

தொற்றுநோய் நிலைமை காரணமாக வவுனியா சிறைச்சாலையில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் ஒரு கைதிக்கும் சிறைச்சாலை அதிகாரிக்கும் அம்மை நோய் ஏற்பட்டதால் அதன் பரவலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சிறை வளாகத்துக்குள் நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதிக்க சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த நடமாட்டக் கட்டுப்பாடுகள் நேற்றுடன் நீக்கப்பட்டன என்று வவுனியா பிராந்திய தொற்றுநோய் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

அதன்படி இன்றுமுதல் வழமை போன்று அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு வவுனியா சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

# தூக்கிலிருந்து சடலம் மீட்பு!



பளை இத்தாவில் பகுதியில் இளைஞரொருவர் தூக்கிலிருந்து நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 20 வயதுடைய இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இறப்புத் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல பிளாஸ்ரிக் பொருள்கள் இரு வாரங்களுக்குள் தடை

## அரசாங்கம் அறிவிப்பு



கொழும்பு, ஓக. 8

அடுத்த இரண்டு வாரங்க... ...ள் சில பிளாஸ்ரிக் பொருள்கள... ...தடை விதிக்க அரசாங்கம் தீர்மான... ...ளது என்று சுற்றாடல் அமைச்சர் நஸ... அஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டின் 28 ஆவது கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான காலநிலை நியாய மன்றத்தை இலங்கை ஆரம்பிக்கத் தயாராகவுள்ளது.

காலநிலை நீதியை உறுதிப்படுத்துதல், இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு நிதியளிப்பதை துரிதப்படுத்துவதற்கு பாரம்பரியமற்ற மாற்று அணுகுமுறையைப் பேணும் பொதுவான நோக்கத்துடன், காலநிலை நியாய மன்றம் ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை முன்மொழிந்துள்ளது.

அத்துடன் தம்புள்ள மற்றும் ஹிரிவடுன்ன ஆகியவற்றை சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் சில பிளாஸ்ரிக் பொருள்கள், பிளாஸ்ரிக் மாலைகள், ஒருமுறை பயன்படுத்தும் கரண்டிகள், முட்கரண்டிகள் உள்ளிட்ட சில பொருள்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் தடைசெய்யப்படும் - என்றார். (ம)

# நீர்க்கட்டண அதிகரிப்பு: போராட ஜே.வி.பி. முடிவு

கொழும்பு, ஓக. 8

நீர்க் கட்டண அதிகரிப்புக்கு எதிராக விரைவாக மக்களை அணிதிரட்டி நாடுபூராகவும் போராட்டம் மேற்கொள்ளவுள்ளோம் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியில் வாழ்வதற்கு கஷ்டப்பட்டு வரும் நிலையில் அரசாங்கம் நீர்க்கட்டணத்தை 50 வீதத்தால் அதிகரித்திருப்பது, பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் மீது சுமத்தப்படும் கடும் சுமையாகும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக விரைவில் மக்களை அணி திரட்டிக்கொண்டு நாடுபூராகவும் போராட்டங்களை மேற்கொள்ளவும் மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் ஜே.வி.பி. தயாராகியுள்ளது - என்றார். (ம)

# ஜனாதிபதியைப் புறக்கணித்து செயற்படவில்லை பெரமுன!

## ரோஹித அபே குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 8

பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் புறக்கணித்துச் செயற்படுவதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் பொதுஜன பெரமுனவுக்குள் எந்தவித முரண்பாடுகளும் இல்லை.

நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் வேட்பாளரை வெகுவிரைவில் அறிமுகப்படுத்துவோம்.

பொதுஜன பெரமுனவே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும்.

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாத்தார்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்கள் தீர்மானமிக்கதாக அமையும். எம்முடன் இணைந்து ஜனாதிபதி செயற்பட்டால் ஒன்றிணைந்து செயற்படலாம்.

அரசியல் ரீதியில் அவர் தனித்துச் செயற்பட்டால் அதற்கு நாங்கள் முழுமையாக இடமளிப்போம்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து கட்சி என்ற ரீதியில் இதுவரை எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமான அறிவிப்பு வெளியானதும் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் வேட்பாளரை விரைவாகக் களமிறக்குவோம். இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் இலங்கை அரசியல் வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் - என்றார். (ம)

# ரணில் விக்கிரமசிங்க ஒரு தேசியச் சொத்து!

## வஜிர அபேவர்த்தன புகழாரம்



கொழும்பு, ஓக. 8

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டைக் கட்டியெழுப்ப முன்வந்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் தேசிய சொத்தாவார்.

தேசிய சொத்தைப் பாதுகாத்துக்கொள்ளத் தவறினால் நாங்கள் அனைவரும் துன்பத்தில் வீழ்வோம் என்று நாடாளுமன்ற உறுப்பினரான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டை விழுந்த இடத்தில் இருந்து மீண்டும் தூக்கி வைப்பதாக இருந்தால், எனக்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றவுடன் தெரிவித்தார். நாங்கள் இன, மத, குலம் என பிரிந்தோம். அதனால் நாடு என்றவகையில் நாங்கள் பின்னுக்குச் சென்றோம். தற்போது அந்த நிலையை மாற்றவேண்டும். எங்கள் பிள்ளைகளுக்கு எதிர்காலம் தேவை என்றால் நாங்கள் தூர நோக்குடன் சிந்தித்துச் செயற்பட வேண்டியிருக்கிறது. அத்துடன் வீழ்ந்திருந்த தேசத்தைக் கட்டியெழுப்ப ரணில் விக்கிரமசிங்க இருந்தமையையிட்டு நாங்கள் அதிர்ஷ்டசாலிகள் என எண்ணவேண்டும். தேசிய [illegible] கிடைக்கப்பெற்றிருக்கிறார் - என்றார். (ம)




சொன்ன சொல்லைக் காப்பாத்துறதுதான் பெரியவைக்கு அழகு. ஆனால் இப்ப பெரியாக்கள் எல்லாரும் என்ன சொன்னம் எண்டதையே மறந்துபோய்த் திரியினம். அவைக்கு அதால ஒரு நட்டமுமில்லை, அப்பாவியளுக்குத்தானே நட்டம்.

இப்பிடித்தான் எங்கட யாழ்ப்பாணக் கம்பஸ்காரர் செய்த வேலையால சிலரின்ர வாழ்க்கையே திசைமாறிப்போயிருக்கு. 2018 ஆம் ஆண்டு கம்பஸுக்கு புதுசா எடுபட்ட பிள்ளையளுக்கு 'ஓரியண்டேசன் புரோக்கிராம்' நடந்தது. இந்த ஓரியண்டேசனிலதான் பிள்ளையள் என்னென்ன பாடங்கள் ஸ்பெஷல் செய்யலாம், அப்பிடி ஸ்பெஷல் செய்தால் என்னென்ன நன்மையள், என்னென்ன வேலையள் கிடைக்கும், மேற்படிப்புக்கு எப்பிடியான வாய்ப்புகள் இருக்கு எண்டெல்லாம் விலாவாரியாச் சொல்லுவினம். அந்த வருச ஓரியண்டேசனில புதிசா சில பாடங்களை மானியங்கள் ஆணைக்குழுவிட்ட பெர்மிசன் எடுத்து ஸ்பெஷல் செய்யக்கூடிய பாடங்களாக மாத்தப்போறம் எண்டு அறிவிச்சிருக்கினம். ஈ.எல்.ரி. (ஆங்கில மொழிமூலம் கற்பித்தல்) எண்டொரு பாடமும் இப்பிடி ஸ்பெஷல் செய்யிற மாதிரி மாத்துப்பட இருக்கிறதா, அவை சொன்னதை நம்பி, இங்கிலிஷ்ல ஆர்வமுள்ள பிள்ளையள் அந்தப் பாடத்தை எடுத்திருக்குதுகள்.

முதல் வருசம் முடிஞ்சு இரண்டாம் வருசம் தொடங்கிட்டுது. இரண்டாம் வருசத்தில தான் என்ன பாடம் ஸ்பெஷல் செய்யப் போறம் எண்டதைப் பிள்ளையள் தீர்மானிக்கவேணும். அப்பவும் அந்தப் பாடத்தை ஸ்பெஷல் டிகிரியா செய்ய பெர்மிசன் கிடைச்சிட்டோ, இல்லையோ எண்டு அறிவிக்காமல் லெக்சர்ஸ் நடந்திருக்கு. கிட்டத்தட்ட 20 பிள்ளையள் அந்த ஈ.எல்.ரி. எண்ட பாடத்தை ஸ்பெஷலா எடுத்துப் படிச்சிருக்கினம். அதுக்குப் பிறகு 2019 இல கம்பஸுக்கு புதுசா வந்தவைக்கும் அதே பழைய கதை சொல்லுப்பட்டு, அந்த பட்ஜிலையும் சில பிள்ளையள் ஈ.எல்.ரி. பாடத்தை எடுத்திருக்குதுகள். அவையும் முதல் வருசம் முடிய அந்தப் பாடத்தில ஸ்பெஷல் செய்ய வெளிக்கிட்டினம்.

அப்பதான் எங்கட கம்பஸ்காரர் 'அந்தப் பாடத்துக்கு இன்னும் அனுமதி கிடைக்கேலை. நீங்கள் ஜெனரல் டிகிரி செய்திட்டு போங்கோ' எண்டு சொல்லியிருக்கினம். இதைக் கேட்டு ஈ.எல்.ரி. ஸ்பெஷல் செய்துகொண்டிருந்த ரண்டு பட்ஜ் பிள்ளையளுக்கும் தலையில இடிவிழாத குறை. முதலே இதைச் சொல்லியிருந்தா அந்தப் பிள்ளையள் வேற பாடத்தில ஸ்பெஷல் டிகிரி செய்து, அதுகளின்ர வாழ்க்கையை வேற திசையில நல்லபடியாக் கொண்டு போயிருப்பினம். எல்லாம் கடந்த பிறகு சொன்னால் அவை என்ன செய்ய ஏலும்? தங்கட தலைவிதியை நொந்தபடி ஒரு பட்ஜ் ஜெனரல் (சாதாரண) டிகிரி செய்து பாஸ் அவுட் ஆகிட்டினம். இந்தமுறை நடந்த பட்டமளிப்பு விழாவுக்கு இப்பிடி பாதிக்கப்பட்ட சிலர் பட்டம் வாங்கவும் போகேலையாம். சிலர் குடுத்த பிழையான வாக்குறுதியள் நிறைவேற்றப்படாட்டி இப்பிடித்தான் அப்பாவியளின்ர வாழ்க்கை அநியாயமாகிடும். இனியாவது உதுகளை உணர்ந்து, செய்யக்கூடியதுகளை மட்டும் சொன்னால் இப்பிடியான நிலை வராமல் தடுக்கலாம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் கால்நடைகளுக்கு விசேட தொட்டிகளில் தண்ணீர்!



## தன்னார்வலர்கள் இணைந்து முன்மாதிரி

**யாழ்ப்பாணம், ஓக. 8**

**யாழ்ப்பாணம் புங்குடுதீவுப் பகுதியில் கால்நடைகளின் தாகத்தைத் தீர்ப்பதற்காக விசேட தொட்டிகள் அமைக்கப்பட்டு தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணத்தில் தற்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் வரட்சி கோரத்தாண்டவமாடுகின்றது. இதனால் குளங்களும் நீரேரிகளும் விரைவாகத் தண்ணீரின் இருப்பிழப்பைச் சந்தித்து வருகின்றன. அத்துடன் மேய்ச்சல் நிலங்களும் காய்ந்துபோய் பாலைவனமாக மாறிக்கொண்டுவரும் பின்னணியில் உணவாகாரமோ அல்லது தண்ணீர் ஆகாரமோ இல்லாமல் கால்நடைகள் அந்தரித்துத்திரிகின்றன. தீவகத்தில் இந்த நிலைமை மேலும் மோசமாகியுள்ள நிலையில், தன்னார்வலர்களும் நலன்விரும்பிகளும் இணைந்து புங்குடுதீவில் சிறப்புத் தண்ணீர்த் தொட்டிகள் அமைத்து கால்நடைகளுக்காக தண்ணீர் நிரப்பியுள்ளனர். அத்துடன், சீரான இடைவெளியில் அடுத்த சில வாரங்களுக்கு கால்நடைகளுக்கு தண்ணீர் கிடைப்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். மாடுகளுக்குக் குறிபோட்டு அவற்றை உரிமை கொண்டாடுபவர்கள்கூட அந்த மாடுகளின் தண்ணீர்த் தேவையை நிவர்த்திசெய்ய முன்வராத நிலையில், தன்னார்வலர்களின் இந்த முயற்சி பலராலும் பாராட்டப்படுகின்றது. இதுபோன்று வடக்கின் பிற பகுதிகளிலும் கால்நடைகளின் தண்ணீர்த் தேவையை போர்க்கால அடிப்படையில் பூர்த்திசெய்வது தற்போது அவசியமாகவும் அவசரமாகவும் உள்ள விடயம் என்றும் அதற்குப் பொது அமைப்புகளும் தன்னார்வலர்களும் முன்வர வேண்டும் என்றும் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

## நா.பிரதீபராஜாவின் நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறையின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி. நாகமுத்து பிரதீபராஜா எழுதிய காலநிலை மாற்றம், இடர் முகாமைத்துவம் மற்றும் ஹைட்ரோ க்ளைமேட் ஒப் நொதேர்ண் சிறிலங்கா (வடக்கு மாகாணத்தின் நீர் காலநிலை) ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் புவியியற்துறை திட்டமிடல் சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வராஜா ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-ரி2,66)



## மடு அன்னைக்கு ஏறியது கொடி!

மன்னார், ஓக. 8

இலங்கையின் புகழ்பெற்ற கத்தோலிக்க யாத்திரை ஸ்தலமான மடுத்திருத்தலத்தின் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பாப்பரசரின் கொடியை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளாரும் அன்னையின் ஆலயக் கொடிகளை மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் மற்றும் சகோதரமொழி பேசும் அருட்தந்தை ஒருவரும் ஏற்றிவைத்தனர். (ம-60)

## குருபூசையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், ஓக. 8

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்படும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடரின் 18 ஆவது பகுதி புத்தூர் கிழக்கு கருப்பை ஈஸ்வரன் திருவருள் மிகு ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் தேவஸ்தானப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் பொன்.சந்திரவேல் 'சந்தனக்கட்டை கிடைக்காதபோது தனது கையைச் சந்தனக்கல்லில் தேய்த்த நாயனார்' என்னும் கருப்பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 8

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் செ.கந்த. சத்தியதாசன் 'கொற்ற வேல்' என்னும் தொனிப் பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

## கிழக்கில் மழை; வடக்கில் காற்று

கிழக்கில் இன்று மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்றும், வடக்கு மாகாணத்தில் கடற்கரையோரங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். அத்துடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக சீரான காலநிலை நிலவும்.

சிலாபத்திலிருந்து புத்தளம், மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படும். சிலாபத்திலிருந்து புத்தளம், மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் [illegible] (ம)

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில்சிறுசிறுதடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்து கொண்டாலும் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணை ஆதரவு தருவார். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்ய வேண்டிவரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எல்லாவற்றையும் மாற்றுங்கள்!

அடுத்த ஆண்டுமுதல் பாடசாலைகளின் தவணைப் பரீட்சைகள் குறைக்கப்பட்டு, ஆண்டுக்கு ஒரேயொரு தவணைப் பரீட்சையை மாத்திரம் நடைமுறைப்படுத்தும் வகையிலான கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்பதாக அறிவித்திருக்கின்றார் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த. அத்துடன், மாணவர்கள் தனியார் கல்வியையும் மேலதிகக் கற்றலையும் தேடக்கூடிய அவசியம் இல்லாத வகையில் இந்தக் கல்விச் சீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் பகிரங்கப்படுத்தியிருக்கின்றார்.

ஆசியப் பிராந்தியத்தில் கற்றறிந்தோர் சராசரியை ஏற்றத்தில் கொண்டிருந்தாலும், இலங்கையின் கல்வி முறைமை மிகப்பழமையானது. வெறும் பரீட்சை மையக் கல்வியால் பிள்ளைகள் ஏட்டுச்சுரைக்காய்களாக மட்டுமே மாற்றப்படுகிறார்கள். அத்தோடு மாணவர்களின் நேரம் அதிகளவில் விழுங்கப்படுவதோடு, மன அழுத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கும் உட்படுகின்றனர். நேர்படக் கூறினால் 'பிற்போக்கானது'. இவ்வாறானதொரு நிலையில், இலங்கையின் கல்விக் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் கல்வியியலாளர்களால் கடந்த சில வருடங்களாகவே தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இப்போதாவது கல்வி அமைச்சரிடம் இருந்து இவ்வாறானதொரு அறிவிப்பு வெளிப்பட்டிருப்பது வரவேற்க வேண்டியதே. ஆனால், அழுத்தங்களுக்கு அடிபணியாமல் 'ஆசியப் பாரம்பரிய' அதீத கல்விச் சுமையில் இருந்து பச்சிளம் குழந்தைகளை விடுவித்து அவர்களை, இந்த நாட்டின் கல்வித்துறை பட்டாம்பூச்சியாக பறக்கவிடுமா? என்றால் அது சந்தேகம்தான். ஏனெனில், இலங்கையின் கல்விக் கட்டமைப்பு நாளுக்குநாள் தனியார் மயப்பட்டு வருகின்றது. கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் இருந்த இலவசக் கல்விக் கட்டமைப்பு இப்போதில்லை. கல்வி துரிதகதியில் தனியார் மயப்பட்டுவரும் பின்னணியில், பரீட்சைக்குறைப்பும் தனியார் மயத்தை புறந்தள்ளிய நேர்த்தியான 'டெனிஷ் கல்வி முறையும்' நிச்சயம் பல தரப்புக்கும் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவே செய்யும். அதேநேரம், பரீட்சைக் குறைப்பால் நேர்த்தியான கல்விக் கட்டமைப்பை இலங்கையில் உருவாக்க முடியுமா? என்ற கேள்வியையும் நாம் கேட்க – ஆராய வேண்டியிருக்கின்றது.

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் தொடர்ந்து 15 ஆண்டுகளுக்கும் மேலாக முன்னணியில் திகழ்கின்றது டென்மார்க். டென்மார்க் இந்த உயர் அங்கீகாரத்தைப் பெற்றமைக்கு முதன்மைக் காரணம் அந்த நாட்டின் கல்வி முறையே. அங்கு இரண்டு வயதிலேயே பிள்ளைகள் கல்விச் சாலைகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஆனால், புத்தகக்கல்வி அங்கு இடம்பெறுவதில்லை. பச்சை, மஞ்சள், நீலம் என இங்கு வர்ணம் தீட்டும் ஆரம்பக்கல்வி அங்கில்லை. ஆனால், அவர்கள் நிறங்களை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் பாங்கு அத்தனை நேர்த்தியானது – அலாதியானது. உதாரணமாக, விதம்விதமான நிறங்களில் பந்துகளை ஓரிடத்தில் குவித்துவிட்டு, அதிலிருந்து மஞ்சள் பந்துகளைத் தனியாகவும் நீலப் பந்துகளைப் பிறிதாகவும் பிரித்தெடுக்க விடுவார்கள். இங்கே கற்றல் விளையாட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஏழு வயதுவரை இவ்வாறான கற்றல்தான். வயது – சிந்தனைத்திறன் என்பவற்றுக்கு ஏற்ப அடுத்தடுத்த கட்டங்கள் தீர்மானிக்கப்படும்.

அத்துடன், வகுப்பறைகளுக்குள் நூற்றுக்கணக்கில் மாணவர்களை அடைத்துவைக்கும் கலாசாரத்தை டென்மார்க் வெறுக்கின்றது. ஆசிரியர்களுக்கு உச்சபட்ச ஊதியத்தை வாரியிறைக்கும் அந்த நாடு தன் ஆசிரியர்களை உலகின் ஆகச்சிறந்த கல்விமான்களாக விசேட திட்டங்கள்மூலம் மாற்றி வைத்திருக்கின்றது. 'தரமான சிற்பிதான் நல்ல சிற்பங்களுக்குத் தகுதியானவன்' என்பது டெனிஷ் கல்விக்கொள்கை. அத்துடன் பல்கலைக்கழகத்துக்குப் பின்னரும்கூட முற்றுமுழுதான இலவசக் கல்விமுறை அங்குள்ளது. ஆக, மேற்கத்தேய கல்விக் கலாசாரத்தை பிரதியெடுக்கத் தயாராகும் இலங்கை, அங்குள்ள இதர நல்லதிட்டங்களையும் பின்பற்ற வேண்டும். பரீட்சைக் குறைப்பை மட்டுமல்லாமல் இங்கு தலைவிரித்தாடும் ஆசிரியர்கள் பற்றாக்குறை, ஆசிரியர்களின் ஊதிய நிலுவை, கல்வி தனியார் மயமாகும் இழிநிலை, ஓர் ஆசிரியருக்கு இத்தனை மாணவர்கள் என இருக்கும் விகிதாசாரம் என்பவற்றையும் பின்பற்றும் பட்சத்தில் நல்லதொரு மாற்றம் சாத்தியமே. கல்விக் கட்டமைப்புக்குள் உள்ள பூதாகரமான குறைகள் அவ்வாறே இருக்கையில், பரீட்சைக் குறைப்புக்களால் வளமான கல்விக் கலாசாரம் உருவாகும் என்றால் அதைவிட முட்டாள்தனம் வேறொன்றுமில்லை. கண்ணாடியைத் திருப்பினால் வண்டி நகராதுதானே!

## நாளொரு நல்வார்த்தை

"மனத்திருப்தி நமக்கு இயற்கையாகக் கிடைத்த செல்வம். ஆடம்பரம் நாம் செயற்கையாக உருவாக்கிக் கொண்ட பஞ்சம்"

– சோக்கிரட்டிஸ்



### 1980க்கு முன்னரான விவகாரம்

# காணாமலாக்கப்பட்டோரில் 75 வீத விசாரணைகள் முடிவு



கொழும்பு, ஓக. 8

**1980ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளின் படி 75 சதவீதமான விசாரணைகள் முழுமை பெற்றுள்ளன என்று காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஊடாக மூன்று கட்டமாகப் பகுப்பாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இவற்றில் 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவின் விசாரணைகள் மற்றும் 2000ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளுக்கான விசாரணைகள் 1980ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவின் விசாரணைகள் என்பனவே அவை. இவற்றில் இன்றைய காலப்பகுதியில் 1980ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளின்படி 75 சதவீதமான விசாரணைகள் முழுமை பெற்றுள்ளன.

தற்போது 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விசாரணைகளைமேற்கொள்ளுவதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினதும், சட்டமா அதிபரினதும் அறிக்கைகளையும் பெற்றுவருகின்றோம் - என்றார். (ம-27)

# இலங்கைக் கடன் ஒத்திவைப்பு இந்தியா இறுதி முடிவில்லை!

கொழும்பு, ஓக. 8

இலங்கைக்கு வழங்கிய கடன்களை மீளப் பெறுவதை 12 ஆண்டு காலத்துக்கு ஒத்திவைக்க இந்தியா இணங்கியுள்ளது என்று வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று இந்தியாவின் ஏற்றுமதிக் கடன் உத்தரவாதக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம்.செந்தில்நாதன் தெரிவித்தார்.

"இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து உருவாக்கிய செயலகம் இலங்கையில் கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளது. அந்தச் செயலகத்தால் இந்த விடயம் தொடர்பாகவும் ஆராயப்பட்டிருக்கலாம். ஆனால் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை" என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

# சீனாவை ஒதுக்கிய இலங்கை

சீனா பாகிஸ்தான் நிறுவனத்துக்கு வழங்கப்படவிருந்த திரவ இயற்கை எரிவாயு உற்பத்தித் திட்டம் இந்திய நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. எனினும் இந்தியா அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. இந்தப் பின்னணியிலேயே சீனா மற்றும் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட நிறுவனத்திடமிருந்து அந்தத் திட்டம் கைவாங்கப்பட்டு இந்திய நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-6)

**நாளை**

09.08.2023
புதன்கிழமை
ஆடி 24

சுபநேரம் : 04.34 - 06.04
ராகுகாலம் : 12.04 - 01.34

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை

# மன அழுத்தங்களில் இருந்து மீட்க வீட்டுத்தோட்டமே வழி!

## பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஓக. 8**

**மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்து மீட்க வீட்டுத்தோட்டம் சிறந்த பரிகாரமாக அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மாணாக்க உழவர் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு விதைப் பொதிகளையும் செயன்முறைப் பயிற்சிகளையும் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மாணவர்கள் பல்வேறு காரணங்களினால் மன அழுத்தங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே அவர்களால் சரிவரக் கற்றலை மேற்கொள்ள முடியவில்லை. போதை, வன்முறை என்றும் சமூகப் பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களில் ஒருசாரார் தற்கொலை முடிவை நோக்கியும் செல்கிறார்கள். இவர்களை மன. அழுத்தங்களில் இருந்து விடுவிக்க வீட்டுத்தோட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவதுதான் சிறந்த பரிகாரமாக அமையும். இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட வழிமுறையாகும். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும், உணவு நெருக்கடிக்கும் விட்டுத்தோட்டம் சிறந்த தீர்வாக அமையும். இந்த அனுகூலங்களைவிட மேலான அனுகூலமாக வீட்டுத்தோட்டங்கள் மனதை அலைபாயவிடாமல் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தவும் உதவுகின்றது.

தோட்டங்களில் மண்ணைக் கைகளினால் தொடும்போது - மண்ணில் உள்ள பக்றீரியங்களைத் தொடும்போது உடலில் செரற்ரோனின் என்ற ஓமோன் சுரப்பது தூண்டப்படுகிறது. இது ஆய்வுரீதியாக நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை. செரற்ரோனின் மனச்சோர்வைக் களைந்து, மன அழுத்தங்களில் இருந்து விடுபட வைத்து, மனஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு இரசாயனம் ஆகும். இயற்கையாக செரற்ரோனின் உருவாகுவதைத் தூண்டும் வீட்டுத்தோட்டச் செய்கையில் மாணவர்களை ஈடுபடுத்தினால் செயற்கையாக உற்சாகத்தைத் தூண்டும் ஆபத்தான போதைக்கு அவர்கள் அடிமையாக மாட்டார்கள்.

ஆசிரியர்கள் வீட்டுத்தோட்டம் என்றால் அது விவசாயம் பயிலுகின்ற மாணவர்களுக்கு மாத்திரம்தான் என்று நினைக்கிறார் கள். பெற்றோர் வீட்டுத்தோட்டங்களில் மாணவர்கள் ஈடுபட்டால் அவர்களின் படிப்புப் பாழாகிவிடும் என்று கருதுகிறார்கள். இந்த மனோநிலையில் மாற்றம் வேண்டும் - என்றார். (ம-27)

# கோப்பாய்

## ஆசிரிய கலாசாலையில் நினைவிடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக. 8

நூற்றாண்டு காணும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நூற்றாண்டு நினைவிடத் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-66)

# நோர்வே தேர்தலில் ஈழத்தமிழ் இளைஞர்



யாழ்ப்பாணம், ஓக. 8

நோர்வேயில் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் ஈழத்தமிழ் வம்சாவளி இளைஞர் ஜெரோன் ஜோசப் (வயது - 29) என்பவர் அங்குள்ள தொழிலாளர் கட்சியின் சார்பாகப் போட்டியிடவுள்ளார்.

இவரது தாய், தந்தை இருவரும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர்கள். நோர்வேயில் பேர்கன் நகரில் உள்ள வெஸ்ட்லாண்ட் பகுதியில் மாகாண இளம் தொழிலாளர் வாலிபர் சங்கத் தலைவராகவும் இவர் பணிபுரிந்து வருகின்றார். (ம-125)

# நான்காவது தமிழியல் மாநாடு யாழ். பல்கலையில் ஆரம்பம்!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை நடத்தும் நான்காவது தமிழியல் ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமானது.

நேற்றைய முதலாம் நாள் நிகழ்வுகள் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா மற்றும் மாநாட்டின் இணைத்தலைவரும் கலைப்பீடப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி.ரகுராம் ஆகியோர் வழங்கினர்.



ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினருமான கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார். தமிழியல் ஆய்வுமாநாட்டுக்கான திறப்புரையை சென்னைப் பல்கலைக்கழக தமிழ்மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் ய.மணிகண்டன், 'தமிழில் அற இலக்கியம்: வரலாறும் பல்பரிமாணங்களும்' என்ற தலைப்பில் ஆற்றினார்.

ஆரம்ப நிகழ்வில் தமிழுக்குப் பணியாற்றிய மூத்த பேராசிரியர்கள், பண்டிதர்கள், 10 மூத்த அண்ணாவிமார்கள் கௌரவிப்பு, யாழ்ப்பாண அகராதியைத் தொகுத்தவருக்கான கௌரவிப்பு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு, பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட தமிழறிவுப்போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெற்றன. (ம-125)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு • 07 • 04 • 1966

இறப்பு • 06 • 08 • 2023

### பேணடீன் றேனுகா அஞ்சலோ உதயகுமார்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பேணடீன் றேனுகா அஞ்சலோ உதயகுமார் நேற்றுமுன்தினம் (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தீயோ பிரான்சிஸ் - பிலோமினா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற யோசேப்பு மற்றும் பிலோமினம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், யோசேப் அஞ்சலோ உதயகுமாரின் அன்பு மனைவியும், அன்ரன் மனோஜ், ஒஸ்ரின் டினேஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகா, ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.08.2023) கொழும்பு பொறளையிலுள்ள Raymends parlour காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் மேலும் நல்லடக்க ஆராதனைகள் நாளை (09.08.2023) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் உடுவில் தூய செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்று, பூதவுடல் மல்வம் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.05, உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி.**

**தகவல்: குடும்பத்தினர்**

(cs51551) (N.1)

## மரண அறிவித்தல்



### செல்வன் சங்கர் சஞ்சீவி

தோற்றம் • 18 • 08 • 2003

மறைவு • 07 • 08 • 2023

(மாணவன் - ஹாட்லிக்கல்லூரி க.பொ.த உயர்தரம் உயிரியல் பிரிவு - 2023)

கோவிற்கடவை துன்னாலை மத்தியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் சங்கர் சஞ்சீவி நேற்று (07.08.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சங்கர் (களஞ்சிய பொறுப்பாளர் கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), காலஞ்சென்ற தனமதி தம்பதியரின் பெறாமகனும், சுரோனின் அன்புச் சகோதரனும், முரளி (அதிபர் - கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), யாழினி (ஆசிரியை - ஞானாசிரியர் கல்லூரி) தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், கமலம்மா, வீரவாகு சிவபாக்கியம், முத்துக்குமார், செல்லம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சுதாமதியின் பெறாமகனும், இந்தியாவைப் பிறப்பிடமாகக்கொண்ட ஆறுமுகம், ஆண்டாள் தம்பதிகளின் பேரனும், ஞானப்பிரகாஷ் (வைத்தியர் - யாழ் போதனா வைத்தியசாலை) - நந்தினி (வைத்திய நிபுணர் - யாழ்போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பெறாமகனும், முரளிதரன் (சட்டத்தரணி) அனுஷா (வங்கி உத்தியோகத்தர் - இலங்கை வங்கி - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மருமகனும், ஆராதனா, ஆர்த்தியின் அன்புச் சகோதரனும், இந்தியாவில் வசிக்கும் காண்டீபனின் பெறாமகனும், திருமூர்த்தியின் மருமகனும், ஈஸ்வரன், ஆரியாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

(cr40376) (N.1)

## மரண அறிவித்தல்



### வஸ்தியாம்பிள்ளை பொன்னுத்துரை

யாழ். வசாவிளான் வடமூலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் யாழ். கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை பொன்னுத்துரை அவர்கள் 05.08.2023 அன்று இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை செல்லம்மா ஆகியோரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற குணரத்தினம் என்பவரின் அன்புக் கணவரும், அமிர்தநாயகம், பெனடிக்ற், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், பிரான்சிஸ், திரேசம்மா ஆகியோரின் சகோதரரும், மரியதாஸ் குணசிங்கம் (குணபாலசிங்கம்) அவர்களின் பாசமிகு தந்தையும், நிர்மலாவின் அன்பு மாமனாரும், நிரோஷன், ஆன் டிஷ்னி, பிறேம்ஜி போல், அகன்ஷியா ஆகியோரின் பேரனும், எயிடன், றென்லன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (2023.08.08) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் வசாவிளானில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 03.00 மணிக்கு வசாவிளான் தூய உத்தரியமாதா தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு, ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மரியதாஸ் குணசிங்கம் (குணபாலசிங்கம்) மகன்**

(CS 25875)A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு • 30 • 11 • 1944

இறப்பு • 04 • 08 • 2023

### வயித்திலிங்கம் தம்பிரான் சிவராஜன் அமிர்தவல்லி

வட்டுக்கோட்டை, அராலி மத்தி உலோலைசிட்டி சித்தி விநாயகர் கோவில் சிவபுரிமடத்தைப் பிறப்பிடமாகவும் தென்னிந்தியா சிதம்பரம் வடக்கு மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் தம்பிரான் சிவராஜன் அமிர்தவல்லி கடந்த (04.08.2023) வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் அம்பலவாணர் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், வயித்திலிங்கம் தம்பிரான் - பார்வதி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரம் சிவபுரிமட மடாதிபதியும் தருமகர்த்தாவும் வட்டுக்கோட்டை அராலி மேற்கு சிவபுரிமடத்தின் மடாதிபதியும் இதனுடன் சார்ந்த உலோலைசிட்டி சித்திவிநாயகர் கோவிலினதும் காரைநகர் மடத்துக் கரை மகாமுத்துமாரி அம்மன் கோவிலினதும் தருமகர்த்தாவும் ஆகிய அம்பலவாணர் வீரகத்திப்பிள்ளை தம்பிரான், இந்திராணி , முத்துக்குமாரசாமி ஆகியோரின் மூத்த சகோதரியும், சிதம்பரம் சிவபுரிமடத்தினதும் வட்டுக் கோட்டை அராலி மத்தி சிவபுரி மடத்தினதும் மடாதிபதியும் இதனுடன் சார்ந்த உலோலை சிட்டி சித்திவிநாயகர் கோவிலினதும் காரைநர் மடத்துக்கரை மகாமுத்துமாரி அம்மன் கோவிலினதும் தருமகர்த்தாவும் ஆகிய சொக்கநாதன் தம்பிரான், செந்தில்நாதன், சிவதங்கா, இராசலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சங்கானை வடக்குமடம் தர்மகர்த்தா வ.த.துரைராஜனின் மைத்துனியும், து. நாகரத்தினத்தின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (04.08.2023) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் சிதம்பரத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை வலிகாமம் மேற்குப் பகுதியின் சுழிபுரம் சங்கானை வட்டுக்கோட்டை பகுதிகளில் உள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பாலசிங்கம் சிறிஸ்கந்தன்**

**077 833 2954**

(CS/25879)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 . 02 . 1955



மறைவு
20 . 07 . 2022

## அமரர் பொன்னுத்துரை தேவபாதம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார். உறவினர். நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

(CR 40379) A-1

# நீர் விடுவிப்புத் தொடர்பில் மின்சக்தி அமைச்சில் ஆய்வு

கொழும்பு, ஓக.8

சமனல வாவியில் இருந்து உடவலவ நீர்த் தேக்கத்துக்கு நீரை விடுவித்தல் மற்றும் தொடர்ச்சியாக மின்சாரம்வழங்குதல்போன்றவேலைத்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் மற்றும் தீர்வுகளைத் தயாரிக்கும் பணிகள் நேற்று திங்கட்கிழமை காலை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நடைபெற்றன.

நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் இலங்கை மின்சாரசபை அதிகாரிகளுக்கு இடையே ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைய இந்த முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள் ளன. இந்தமுன்மொழிகள் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# பெயர் மாற்றம்

துறைமுகம் மாதகலில் வசிக்கும் சுஜந்தா ஆகிய நான் எனது பெயரை **மேரி சுஜந்தா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மேரி சுஜந்தா** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

- மேரி சுஜந்தா

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
15 . 07 . 1942



உதிர்வு
05 . 08 . 2023

## அமரர் முடியப்பு டோமினிக்கம்மா

உடல் வருத்தம் பாராத
உண்மை உழைப்பின் உதாரணம்!..
உயரத்தில் நீ இருந்தாலும்
உயிர் உள்ளவரை உன் நினைவில் நாங்கள்!!..
ஆலமரம் சாய்ந்தது அதன் நிழலில் நின்ற
ஜீவன்கள் எல்லாம் தன்னுயிர் பிரிந்தது போல
தவித்துக் கொண்டிருக்கிறது.

ஆழ்ந்த கண்ணீருடன்...
புஷ்பா (மகள்)
ஜதுஷன், ஜான்ஷனா (பேரப்பிள்ளைகள்)

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (06.07.2023) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர்
## திருமதி மதி ராசம்



அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.08.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

கனகசபை வீதி, மானிப்பாய்.
தொ.பே: 077 899 5617

(CS 25876) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 02 . 1948



மறைவு
07 . 08 . 2023

## நல்லதம்பி செல்வராசா

(முன்னாள் அஞ்சல் அதிபர்)

தையிட்டிப்புலம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வவுனியா தற்போது மூளாயை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி செல்வராசா (முன்னாள் அஞ்சல் அதிபர்) அவர்கள் நேற்று (07.08.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும். பூமணி தேவியின் அன்புக் கணவரும். சஞ்சயன். சுவேதா. சஞ்சிதா ஆகியோரின் அன்புத் தந்தையும். காலஞ்சென்ற தவராசா மற்றும் இரத்தினேஸ்வரி. காலஞ்சென்றவர்களான கனகராசா (சுழிபுரம்). சிவராசா (வவுனியா) மற்றும் நகுலேஸ்வரி (சிறுப்பிட்டி). நாகராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும். கண்ணதாசன். கோகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும். கிசான். கிஷோபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 [illegible] (கோகுலன்)
076 [illegible] (சஞ்சிதா)

(CS 25[illegible]) A-1

# மரண அறிவித்தல்

மண்ணக வாழ்வில்
03 . 11 . 1962



விண்ணக வாழ்வில்
06 . 08 . 2023

## அருட்கலாநிதி. டேவிட் சதானந்தன் சொலமன்

(யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபராகவும் தற்போதைய தென்னிந்தியத் திருச்சபை – யாழ்.ஆதீனத்தின் உப-தலைவராகவும், உடுவில் மகளிர் கல்லூரியின் ஆளுநர்சபை உறுப்பினராகவும், மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆளுநர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றியவர்.)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் அவர்கள் கடந்த (06-08-2023) அன்று ஆண்டவருக்குள் நித்திரையடைந்துவிட்டார் என்பதை அறியத் தருகின்றோம்.

இவர் மறைந்த ஸ்டான்லி சொலமன் மற்றும் லீலாவதி சொலமன் ஆகியோரின் புதல்வனும், டொனால்ட் ரட்ணராஜா மற்றும் கருணைநிதி ரட்ணராஜா (கனடா) ஆகியோரின் மருமகனும், காமினி சொலமன் அவர்களின் அன்புக் கணவரும், ஆஷா டிவினியா (ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி), அல்பேர்ட் டிலாந்தன் (அலுவலக உத்தியோகத்தர் - யாழ்ப்பாணக் கல்லூரி), யோனத்தான் டினோஷன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திருமதி சாந்தவதனியின் ஏக சகோதரனும் அப்துல் ஜபார், மரியோ ரட்ணராஜா, பற்றிக் ரட்ணராஜா, ரொனி ரட்ணராஜா, ஷாமினி புரூடி (அவுஸ்திரேலிய), டேவிட் ரட்ணராஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் உடல் 09-08-2023 அன்று மதியம் 12:00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் வைக்கப்பட்டு கல்லூரி சமூகத்தினர் அஞ்சலி செலுத்துவர். அதனைத் தொடர்ந்து மாலை 02:00 மணிக்கு வட்டுக்கோட்டை பேராலயத்தில் இறுதி ஆராதனை நடைபெற்று மாலை 4:00 மணியளவில் உடுப்பிட்டி கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு மாலை 5:00 மணியளவில் கல்லறைத் தோட்ட விழிபாடு நடைபெறும். மேற்படி அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செயலாளர்,
தென்னிந்திய திருச்சபை - யாழ். ஆதீனம்
வட்டுக்கோட்டை.

(CS 25877) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு நீரை விடுவிக்க இணங்கியது அமைச்சரவை

சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்துக்கும் அங்கிருந்து விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்காகவும் தேவையான அளவு நீரை வெளியிடுவதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய மின்சாரத் தேவைக்கு மாற்றுத் தீர்வுகளைக் காணும் அதேவேளையில் சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து விவசாயத் தேவைகளுக்காகத் தேவையான அளவு நீரை வெளியிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்துள்ளார்.

மின்சார உற்பத்திக்குத் தேவை என்பதால், விவசாய நடவடிக்கைகளுக்கு நீரை விடுவிக்க மறுத்தமையால் சுமார் 30 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.இ)


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 | 06 |
| 12 | 08 |
| 1934 | 2023 |

### திரு.இராமலிங்கம் நாகராஜா (C.E.B)

நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டி தொடர்மாடியில் வசித்தவருமான திரு. இராமலிங்கம் நாகராஜா நேற்றுமுன்தினம் (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை மதியம் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் - பாறுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருமதி பூரணம் நாகராஜாவின் (ஓய்வுநிலை ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வராஜா, காலஞ்சென்ற அன்னலக்ஷ்மி, நவரத்தினராஜா, ராஜலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பராசக்தி, பரமநாதன், காலஞ்சென்ற பத்மநாதன், பரிமளம், பவளநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரவீந்திரன், குமுதினி, சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு அப்பாவும், மனோகரன், வக்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், பூஷிதா, லோஷிதா, தேஷிதன், அனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரத்ன மலர்ச்சாலையில் நாளை (09.08.2023) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மதியம் 1.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24996)AH-1


# கட்சியிலிருந்து நீக்கமா? மறுக்கின்றார் சிவாஜி!!



யாழ்ப்பாணம், ஒக. 8

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர்நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் அந்தப்பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக நேற்று மாலை செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தநிலையில் அந்தச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என எம்.கே.சிவாஜிலிங்கம் மறுப்பு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் இந்தியா பயணிப்பதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கட்சி அங்கம் வகிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இந்தியாவில் தங்கியிருந்த எம்.கே.சிவாஜிலிங்கம், இந்தக் கடிதத்துக்கு முரணான, சர்வஜன வாக்கெடுப்பை கோரி நரேந்திர மோடிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்நிலையில் கட்சியின் செயலாளர்நாயகம் பொறுப்பிலிருந்து எம்.கே.சிவாஜிலிங்கத்தை விலகுமாறு கட்சித் தலைமையால் கோரப்பட்டிருந்ததாகவும் அதையடுத்து அவர் பதவிவிலகாத நிலையில் கட்சியை விட்டு நீக்கப்படுவதாகவும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த கட்சியின் தலைமைக்குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதாக நேற்று திங்கட்கிழமை மாலை செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், குறித்த செய்தி தொடர்பில் கருத்துதெரிவித்த எம்.கே. சிவாஜிலிங்கம் அதனை முற்றாக மறுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி நீதிமன்ற வழக்கில் பங்கேற்பது தொடர்பான விடயங்களை கேட்டறிவதற்காக கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உரையாடியிருந்தார். அப்போதுகூட அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது தொடர்பில் எதுவும் தெரிவித்திருக்கவில்லை. இயல்பான முறையிலேயே உரையாடியிருந்தார். வழக்கு நடவடிக்கைக்காக கிளிநொச்சி சென்று திரும்பிய நிலையில் ஓய்வெடுக்கும் வகையில் நித்திரைக்குச் சென்றிருந்தேன். எழுந்து பார்த்தபோது கைபேசிக்கு பல அழைப்புகள் வந்திருந்தன. குறிப்பாக ஊடகவிலாளர்களது அழைப்புகள் வந்திருந்தன. அதன்பின்னர்தான் மேற்குறித்த செய்தி தொடர்பில் அறிந்தேன்.

தற்போதும் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமாக நான்தான் இருக்கிறேன். அதில் எந்த மாற்றமும் இல்லை. கட்சிப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக வெளியான செய்தி வேண்டுமென்றே பரப்பப்பட்ட செய்தியே அன்றி அதில் எவ்வித உண்மையும் இல்லை - என்றார். (அ-ஓ.100)


## சாரதி தேவை

லோடர் சாரதி தேவை.



தொடர்பு: சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## பெயர் மாற்றம்

இல.79, மூத்த விநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **ஜெயிதீசன்** ஆகிய நான் எனது பெயரை **ஜெகதீஸ்வரன்** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **ஜெகதீஸ்வரன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகிறேன்.

ஜெகதீஸ்வரன்

## பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும்

**கைதடி நுணாவில்**
**கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும்**

- **இடம் : கைதடி நுணாவில் குமரகுருபரன் முன்பள்ளி (பழைய இடம்)** (A9 றோட் அருகாமை)
- **தலைமை: திரு.அருள்நேசன்** அவர்கள் (கமநல சேவை திணைக்களம், பெரும்பாக உத்தியோகத்தர்)
- **காலம்: நாளை (09.08.2023) புதன்கிழமை மாலை 3.00 மணி**

**கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்**

**செயலாளர்.**

(cs 23377) (N.I)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 07 |
| 07 | 08 |
| 1952 | 2023 |

### சிவஸ்ரீ கணபதிசாமிக்குரு புருஷோத்தமக்குரு

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குருவும் "வல்லிபுராலயம்", துன்னாலை வடக்கினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ. கணபதிசாமிக்குரு. புருஷோத்தமக்குரு அவர்கள் நேற்று (07.08.2023) வல்லிபுர மாயவன் காலடி சேர்ந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற கணபதிசாமிக்குரு உருக்குமணியம்மா தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்ற கனகசபாபதி ஐயர், புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் மருமகனும், ஸ்ரீமதி. ரஜனி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லோகேஸ்வரி அம்மா இராமச்சந்திரக் குரு, சிவஸ்ரீ. க.சுதர்சனக் குரு, சிவஸ்ரீ. க. இராமச்சந்திரக்குரு ஆகியோரின் சகோதரரும், நித்தியானந்தக் குருக்கள், ராஜேஸ்வரி சிவனாதக்குரு, சுவாமிநாத சர்மா ஆகியோரின் மைத்துனரும், வாசுகி (முகாமைத்துவ உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), சௌமியா (ஆசிரியர், யா/ ஹாட்லிக் கல்லூரி), ராஜாராம் (கணக்காளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் .உமாபதிசர்மா ( அபிவிருத்தி உத்தியோகத்தர், MOH, பருத்தித்துறை) ஸ்ரீசந்திரமௌலிகர சர்மா ( பொறியியலாளர் ,மலேசியா) விதுஜா (விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஸ்ரீநயா ( மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஸ்ரீநிதா (துன்னாலை, காசிநாதர் வித்தியாலயம்), சுபீக்ஷா (உடுவில் மகளிர் கல்லூரி), சாய்நிகேஷ், சாஸ்வதசர்மா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.08.2023) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தொடர்பு : 0776679565
0772391964

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25862) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எர்டோகனுடன் பேச சம்மதித்தார் புடின்!

## உக்ரைனில் அமைதி திரும்ப தொலைதூரத்தில் சிறு ஒளி!




அங்கரா, ஓக. 8

**ரஷ்ய அதிபர் புடின், துருக்கி அதிபர் எர்டோகனுடன் பேச்சு நடத்த சம்மதம் தெரிவித்துள்ளார். இதற்காக இந்த மாதத்துக்குள் அவர் துருக்கிக்குச் செல்லவுள்ளார்.**

உக்ரைன் - ரஷ்யா இடையிலான இராணுவ மோதல் கடந்த 550 நாள்களுக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றது. மேற்கத்தேய நாடுகளின் இராணுவ உதவிகளைக் கொண்டு ரஷ்யாவை வலுவாக எதிர்த்து வருகின்றது உக்ரைன். இந்தப் போரை நிறுத்துவதற்குப் பல தரப்பினரும் பல்வேறு பேச்சுகளை முன்னெடுத்த போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. பேச்சுப் பயனளிக்கும் சமயத்தில் அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கிய ஆயுத உதவிகளும் திரைமறை நடவடிக்கைகளும் பதற்றம் அதிகரிக்கக் காரணமாக இருக்கின்றன என்று ரஷ்யா குற்றஞ்சாட்டி போர் நிறுத்தத்தைத் தவிர்த்து வந்தது.

இவ்வாறானதொரு நிலையில், உக்ரைனில் அமைதியை ஏற்படுத்த கடந்த ஒரு மாதகாலமாக மும்முனை முயற்சிகள் உலக நாடுகளால் மேற்கொள்ளப்பட்டன. ஆபிரிக்க நாடுகளின் அதிபர்கள் புடினை நேரில் கூட்டாகச் சந்தித்து இது தொடர்பில் வலியுறுத்தியிருந்தனர். அத்துடன் மத்திய கிழக்கு நாடுகள் சவூதியின் மத்தியஸ்தத்தில் செங்கடலில் பேச்சு நடத்த அழைத்திருந்ததுடன் அதற்குரிய நடவடிக்கைகளையும் எடுத்தன. இது இவ்வாறிருக்கையில் சீனாவின் மேற்பார்வையில் துருக்கி தனியான முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தது. இந்த நிலையில் துருக்கியின் அதிபர் எர்டோகனை துருக்கியில் வைத்துச் சந்திக்க புடின் திட்டமிட்டுள்ளார். இந்த மாத இறுதிக்குள் இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்று கருதப்படுகின்றது. இதை எர்டோகன் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால், இந்தப் பேச்சுக்குப் போகமுன்னர் சீன அதிபரையும் சந்தித்துப் பேச்சு நடத்த புடின் திட்டமிட்டுள்ளார்.

துருக்கியின் எல்லை நாடுகளான ஈராக் மற்றும் ஈரானில் ரஷ்யாவின் ஆதரவு மனோநிலை உள்ளது. எனவே இந்த எல்லைகளுடன் உள்ள துருக்கியின் புறநகர்களில் இந்தப் பேச்சு இடம்பெறலாம் என்று கருதப்படுகின்றது. (ம)

அரசியலுக்காக

# அச்சமூட்டுகின்றனராம் சிங்கள அரசியல்வாதிகள்

## கூறுகிறார் பிள்ளையான்

கொழும்பு, ஓக. 8

வடக்கு மற்றும் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளைப் போன்றே தெற்கில் உள்ள கடும்போக்குவாத சில சிங்களத் தலைவர்கள் வெளியிடும் தீவிரக் கருத்துக்களால் தெற்கில் உள்ள சிங்கள மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை. இவை பெரும்பாலும் அரசியல் நோக்கங்களுக்காகக் கூறப்படலாம். இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் நம்பிக்கை வைத்துச் செயற்படுவதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும் - இவ்வாறு கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார். ராஜீவ் - ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோர் அன்று 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது அன்றைய அமைச்சரவையில் அமைச்சராக அங்கம் வகித்த தற்போதைய ஜனாதிபதி. இந்த அதிகாரப் பகிர்வுப் பிரச்சினைக்கு நிரந்தமான தீர்வை முன்வைப்பார் என்று எனக்கு நம்பிகை இருக்கின்றது.

அதிகாரப் பகிர்வின் மூலம் நாடு துண்டாடப்படும் என்று தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் கருத்துக்களை வெளியிடும் அதேநேரம், முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும், தமக்கு முழுமையான அதிகாரப் பகிர்வு மாத்திரமே வேண்டும் என்றும் வடக்கு - கிழக்கு அரசியல் தலைவர்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இவை இரண்டுமே இரு தீவிர நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

13ஆவது அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதில் மிதமான போக்குடன் இருதரப்பும் சுமுகமான கலந்துரையாடல்களை நடத்தி இந்தப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதே நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்தது. 13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வதில் மட்டும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் தீர்வுகாண முடியும் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்- என்றார். (அ-ஒ,26)

# ஆப்கானில் பெண்களுக்கு 3ஆம் வகுப்பே அதியுயர்கல்வி

காபுல், ஓக. 8

ஆப்கானிஸ்தானில் பெண்களின் உச்சபட்சக் கல்விமட்டம் மூன்றாம் வகுப்புவரை படிப்பது தான் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பெண்களுக்கு எதிராகக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. பெண்கள் அழகு நிலையம் நடத்தக் கூடாது, வெளியில் காரில் பெண்கள் பயணம் செய்யும் போது ஆண் துணையுடன்தான் செல்ல வேண்டும் என பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இந்த நிலையில் தற்போது பெண் குழந்தைகள் 3ஆம் வகுப்புக்கு மேல் கற்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)





# சீனன்குடாவில் விழுந்து நொருங்கியது விமானம்!

## இரு அதிகாரிகள் சாவு!

திருகோணமலை, ஓக. 8

விமானப்படைக்குச் சொந்தமான பயிற்சி விமானம் சீனன்குடாவில் விழுந்து நொருங்கியதில், அதில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

விமான விபத்து சீனன்குடா விமானப்படைத் தளம் அமைந்துள்ள பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது. விமானச் சோதனைக் கடமைகளுக்காக அங்கு பயணித்த விமானி மற்றும் பொறியியலாளர் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

விமானப்படையின் சீனன்குடா இலக்கம் 1 விமான பயிற்சிப் பிரிவுக்குச் சொந்தமான பிரி- 6 வகையைச் சேர்ந்த விமானமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது. நேற்று மு.ப. 11.25 க்கு புறப்பட்ட விமானம், 11.27க்கு விபத்துக்கு உள்ளாகியது. இதன்போது விமானத்தில் பயணித்த இரண்டு அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகளை முன்னெடுப்பதற்காக விசேட குழுவொன்று விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் உதேனி ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

# கஞ்சாவுடன் கைதானோரை தடுத்து விசாரிக்க அனுமதி

பொன்னாலையிலும், காங்கேசன்துறைக் கடற்பரப்பிலும் கஞ்சாவுடன் கைதானவர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பொன்னாலையில் கடந்த சனிக்கிழமை இரவு 227 கிலோ 915 கிராம் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் ஊர் இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். அவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை- காங்கேசன்துறை கடற்பரப்பில் கடற்படையினரால் 54 கிலோ 300 கிராம் கஞ்சாவுடன் கிளிநொச்சி, தர்மபுரத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞன் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டிருந்தான். இளைஞனை 3 நாள் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. (அ-ஒ,125,26)

# செங்கடல் பேச்சைத் தொடரத் தீர்மானம்

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், செங்கடல் பகுதியில் நடத்தத் திட்டமிட்ட பேச்சைத் தொடர முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சில் ரஷ்யா தனது பங்களிப்பை உறுதிப்படுத்தவில்லை. உக்ரைனுக்கு ஆதரவான மனோநிலையில் உள்ள தரப்புக்களால் செங்கடல் பேச்சு தயார்படுத்தப்பட்டுவரும் பின்னணியில் ஆரம்பத்தில் இருந்தே இந்த முயற்சிகளை ரஷ்யா எடுக்காமல் உள்ளது. ஆயினும் முயற்சிகளைத் தொடர சவூதியும் அதன் ஆதரவுத் தரப்புக்களும் தீர்மானித்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறாளாய்...

ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பறாளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரம் சங்கமித்தை நட்டதாகத் தெரிவித்து வெளியான வர்த்தமானி குறித்து பிரஸ்தாபித்துள்ளார். 'வரலாற்றுப் பேராசிரியர்கள் உள்ளிட்ட பலருடனும் இது தொடர்பில் கலந்துரையாடினேன். அது சங்கமித்தையால் நடப்பட்டது என்பது தவறான தகவல் எனக் குறிப்பிட்டனர்' என்பதையும் அமைச்சர் டக்ளஸ் அமைச்சரவையில் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் இன ஐக்கியம் தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது. ஆனால், தொல்பொருள் திணைக்களத்தின் இவ்வாறான செயற்பாடுகளால் இன ஐக்கியம் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படுகின்றது என்றும் அமைச்சர் டக்ளஸ் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் வர்த்தமானி தொடர்பில் பேசும்போது அமைச்சரவையில் கலந்துகொண்ட துறைசார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மௌனம் காத்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பில் கவனம் செலுத்தி ஆராய்வதாகத் தெரிவித்துள்ளார். (அ-ஒ.5)

## மதுவரிப்...

கரும்பனையில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வீட்டின் கதவைக் கொத்தி உடைக்க முயற்சி மேற்கொண்டபோதிலும் அது கைகூடாததால் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து, பின்னர் பெற்றோல் குண்டை வீசிவிட்டு தப்பியோடியுள்ளனர். ஜன்னல் ஊடாக வீசப்பட்ட குண்டால், அங்கிருந்த 'சோபாசெற்' எரிந்து நாசமாகியுள்ளது. (அ-ஒ.9)

## சிங்கள...

டம் பிடித்துக் கொடுத்திருந்தனர். இந்த நிலையில் தண்ணிமுறிப்பு மீனவர்களை விசாரணைக்கு வரும்படி அழைத்துவிட்டு அவர்களையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி பொலிஸார் சிறையிலடைத்துள்ளனர்.

இந்தச் செயற்பாட்டைக் கண்டித்தும் மீனவர்களை விடுதலை செய்யக்கோரியும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று மு.ப. 10 மணியளவில் பாதிக்கப்பட்ட மீனவர்கள், அவர்களின் உறவினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் மனுவும் கையளிக்கப்பட்டது. 'இரண்டு தடவைகள் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வெலிஓயா மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடமுடியாது என்ற தீர்மானம் இருக்கின்றபோதும் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் இது தொடர்பில் உரிய அமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். போதிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்' என மாவட்டச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட குமுழமுனை, தண்ணிமுறிப்பு மக்களுக்கும், ஹிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் கஜபாகுபுர, சம்பத்நுவர, ஜனகபுர, கலியாணபுர பகுதியிலிருந்து வந்த சிங்களவர்கள் அத்துமீறி கடந்த சனிக்கிழமை மீன்பிடியில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மீனவ சங்கத்தினருக்கும், சிங்கள மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 28 சிங்கள மீனவர்களையும், அவர்கள் மீன்பிடிக்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் மக்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சில சிங்கள மீனவர்கள் தப்பியும் சென்றுள்ளனர்.

இந்நிலையிலிலேயே ஹிச்சிராபும், குமுழமுனை, தண்ணிமுறிப்பு கடற்றொழில் சங்கத்தைச் சேர்ந்த 18 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ.19,113)

## மதிப்பீட்டறிக்கை...

மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இன்று எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை கடந்த மாதம் 20 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனிதப் புதைகுழி தோண்டுவது தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் அறிக்கை சமர்ப்பிக்காத நிலையில் இன்றைய தினத்துக்குத் திகதியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதைகுழி அகழ்வுக்கு எவ்வளவு நிதி தேவை என்பது தொடர்பிலான மதிப்பீடு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் தயாரிக்கப்பட்டு இன்று ஒப்படைக்கப்படலாம் என்று தெரியவருகின்றது.

இதேவேளை - இன்றைய வழக்கு விசாரணைகளின்போது காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்தவும் பங்கேற்கவுள்ளார்.

மேலும், குருந்தூர்மலையில் தமிழ் மக்களின் வழிபாட்டைப் பொலிஸார் தடைசெய்தமை மற்றும் நீதிமன்ற உத்தரவை மீறி வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பான வழக்கு விசாரணையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இன்று எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (அ-ஒ.5,19)

## மோ.சைக்கிள்...

மடைந்த இளைஞர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

துன்னாலை மத்தி, கோயில்கடவையைச் சேர்ந்த சங்கர் சஞ்ஜீவன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி இரவு, மோட்டார் சைக்கிள் பழக முற்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியது. தலைக்கவசம் அணியாத நிலையில் படுகாயமடைந்த இளைஞர் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்றுக் காலை உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ.26)

## கலை...

சர்வதேச தமிழியல் மாநாடு யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் கி.விசாகரூபன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை கோலாகலமாக ஆரம்பமானது. அதன் இரண்டாம் நாள் நிகழ்வுகளாக யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பாரம்பரியக் கலைநிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் இடம்பெறவுள்ளன.

'மிகநீண்ட காலத்துக்குப் பின்னர், கைலாசபதி கலையரங்கில் காண்போருக்கு பெருவிருந்துபடைக்கும் வகையில் அளிக்கை செய்யப்படவுள்ள இந்தப் பாரம்பரிய கலைநிகழ்வுகளை அனைவரும் இலவசமாகக் கண்டுகளிக்கலாம். எனவே இந்தக் கலைநிகழ்வுகளைக் காணும் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல், ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளவேண்டுமென அன்புரிமையோடு அழைக்கிறோம் என்று யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் கி.விசாகரூபன் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## நீரைச்...

கடி ஏற்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட பொறியியலாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெப்பமான காலநிலை காரணமாக நீர் மூலங்களில் நீரின் அளவு குறைந்து வருகிறது. இதன் காரணமாக நாளாந்த நீர்த் தேவையின் அளவில் சுத்திகரித்து விநியோகிப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர், விநியோகிக்கப்படுகின்ற நீரினை பொதுமக்கள் கொதிக்க வைத்து பாதுகாப்பாக அருந்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ-ஒ.214)

## வவுனியாவை...

6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கார் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியாவில் பல்வேறு பகுதிகளிலும் திருட்டுச் சம்பவங்கள் மற்றும் வீதிகளில் செல்வோரிடம் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதாகப் பாதிக்கப்பட்டவர்களால் கடந்த 6 மாதங்களாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையில் பறையனாளங்குளம், தம்பனை பகுதியில் சங்கிலி அறுத்தமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வழிப்பறிக்கொள்ளைகளை ஒரு குழு திட்டமிட்டு மேற்கொண்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அந்தக்குழுவைச் சேர்ந்த 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்திய கார் ஒன்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

தம்பனையைச்சேர்ந்த இருவரும், பெரியதம்பனையைச் சேர்ந்த இருவரும், குட்செட் வீதி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒருவருமாக 6 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை - பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட காரில் மருத்துவமனையில் பணியாற்றுபவர்கள் பயன்படுத்தும் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.18)

## யாழில்...

முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட விசேட குற்றவிசாரணை பிரிவில் 10 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணமோசடிகள் தொடர்பில் முறைப்பாடு செய்யமுடியும்.

இந்தப் பிரிவிலேயே மேற்படி 21 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட அனைத்து முறைப்பாடுகளும் காசோலை மோசடிகளுடன் தொடர்புடையவையாகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்யும் தென்னிலங்கையைச் சேர்ந்த வியாபாரிகள் காசோலைகளை பிற்திகதியிட்டுக் கொடுக்கின்றனர். ஆனால், வங்கியில் பணம் இல்லை என காசோலைகள் திரும்புகின்றன. இவ்வாறு தென்னிலங்கை வியாபாரிகள் ஏமாற்றுவதால் பாதிக்கப்பட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களே முறைப்பாடு செய்துள்ளனர். தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட 6 மோசடிகள் தொடர்பில் 7 பேர் இதுவரையில் கைதாகியுள்ளனர். (அ-ஒ.26)

## காசோலை...

இளவாலையைச் சேர்ந்தவரிடம் ஓராண்டுக்கு முன்னர் 62 இலட்சம் ரூபாவுக்கு வாகனமொன்றை ஒருவர் வாங்கியுள்ளார். அதற்குரிய காசோலையை வழங்கியபோது, வங்கியில் பணம் இல்லாமையால் அது திரும்பியுள்ளது. வாகனத்துக்குரிய பணத்தை கேட்டபோது விரைவில் அதனைத் தருவதாக்கூறி ஏமாற்றிவிட்டு, வாகனத்துடன் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில் 6 மாதங்களுக்கு முன்னர் மாவிட்டபுரத்தில் மேற்படி வாகனம் மின்ஒழுக்கு காரணமாக எரிந்துள்ளது. இதனால் வாகனத்தோடு தலைமறைவானவர் பற்றிய விவரங்கள் வெளியாகின. வாகனத்தை வாங்கியவர் நீண்டகாலமாக ஏமாற்றி தலைமறைவாகியதையடுத்து வாகனத்தை விற்றவர் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்து, யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். இதன்போது அவருக்கு 14 நாள் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.26)

## 19க்கும்...

புடைக்கப்பட்ட ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த மரியதாஸ் ஜெகதாஸ் (வயது - 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தகவல் குறிப்பிடுகையில்;

மேற்படி நபருக்கும் 19 வயது இளம்பெண் ஒருவருக்கும் இடையில் காதல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் இருவரும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீட்டை விட்டுச் சென்றிருந்தனர் எனவும் கூறப்படுகின்றது. இந்நிலையில் அவர்கள் இருவரையும் சேர்த்து வைப்பதாகக் கூறிய உறவினர்கள், ஊருக்கு வருமாறு கூறினர். இந்நிலையில் அவர்கள் இருவரும் நேற்று ஊருக்கு வந்தவேளை மக்களால் ஜெகதாஸ் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்குள்ளானவரை தெல்லிப்பழை மருத்துவமனைக்கு, சுன்னாகம் பொலிஸார் அனுப்பி வைத்துள்ளனர். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார். சடலம் தெல்லிப்பழை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.27,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டண உயர்வு இந்த ஆண்டில் இல்லை!

## மின்சக்தி அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.8

**இந்த வருடத்தில் மீண்டுமொரு மின் கட்டணத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்று வெளியாகும் கருத்துக்களை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நிராகரித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

ஊடகங்களில் ஊகிக்கப்படுவது போல் மின்சாரக் கட்டணத்தில் விலை திருத்தம் இருக்காது. மின்சாரக் கட்டணத்தை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் ஆண்டுக்கு இருமுறை திருத்துவது என்பது அரசின் கொள்கை. திட்டமிடப்பட்ட மின்வெட்டுகள் ஏதுமின்றி, ஆண்டு முழுவதும் தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கு இலங்கை மின்சாரசபை திட்டமிட் டுள்ளது. தற்போது உள்ள மின் நிலையங்களின் முழுக் கொள்ளளவு மின் உற்பத்திக்கு பயன்பாட்டில் உள்ளது.

இலங்கை மின்சாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. திட்டமிடப்பட்ட மின்வெட்டு இல்லாமல் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வதற்கான விருப்பத் தேர்வுகள் மற்றும் விவசாயத் துக்காக வெளியிடக்கூடிய அதிகபட்ச நீர் விநியோகம் தொடர்பில் அமைச்சரவையுடன் பகிர்ந்து கொள்ளப்படும். அடுத்த 12 மாதங்களுக்கு மின் உற்பத்தி, விவசாயத்துக்கான நீர் வெளியீடு, நீர் மின் திறன், அனல்மின்சாரம்கிடைக்கப்பெறும் விருப்பங்கள் தொடர்பான விவரங்கள் பகிரப்பட்டு விவாதிக்கப்படும் - என்றார். (ஏ-இ)

## யாழ்ப்பாணம் – பெரியவிளானில் புலம்பெயர் தொழிலாளர் சங்கம்



யாழ்ப்பாணம், ஓக.8

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரிய விளான் கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த புலம் பெயர் தொழிலாளர் குடும்பங்களை உள்ளடக்கிப் 'புலம்பெயர் தொழிலாளர் சங்கம்' நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் வழங்கப்படுகின்ற வீடமைப்பு வசதி, ஓய்வூதியத் திட்டம், சுயதொழில் வாழ்வாதார உதவித் திட்டம் மற்றும் புலமைப் பரிசில் திட்டம் ஆகிய நலனோன்புத் திட்டங்கள் தொடர்பிலும், தற்போது வெளிநாட்டில் நிலவுகின்ற தொழில் வெற்றிடங்கள் மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர்களால் விளக்கமளிக்கப்பட்டது. (ம-66)


**DHL துரித பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கான துரித பொதிகள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சாதாரண சேவை UK - 1000/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் T.P: 0777 55 45 28
321, K.K.S. Road (முட்டாஸ் கடைச் சந்தி அருகாமையில்), யாழ்ப்பாணம்.

**வீடும் காணியும் விற்பனைக்குண்டு**

கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியில்
3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 076 159 8003
(CS 25879 B)A-1

**வீடும் காணியும் விற்பனைக்குண்டு**

அச்சுவேலி தோப்பு இராச வீதியில் 9 1/2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 076 940 1045
(CS 25879 A)A-1

**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் கல்வியங்காடு 12 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு
* புதிய செம்மணி வீதி.
* 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* ஒரு பரப்பின் விலை 180,000 மட்டும்.

தொடர்புகளுக்கு:
077 6385 683, 076 755 8606
(CS 25880) A-1

**வேலைக்கு ஆள்தேவை**

வீட்டு வேலை பார்ப்பதற்கு பெண் வேலையாள் ஒருவர் உடனடியாகத் தேவை.
(தேவைப்படின் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்)
077 165 7481 (CS 51553) AH-1

**கார் விற்பனைக்கு**

NIZAN SUNY VAGAN MODEL கார் விற்பனைக்கு உண்டு.
(17- வெள்ளை நிறம்)
விலை 10 லட்சம் ரூபா.
T.P: 076 74 83028

**தேவை**

யாழ்நகரில் இயங்கும் விளையாட்டு நிறுவனத்திற்கு கணினி அறிவுள்ள வேலையாள்கள் தேவை.
(ஆண்கள் விரும்பத்தக்கது)
076 017 1522
(CS 51550) (N-1)

**காணி விற்பனைக்கு**

இராசவீதி, கல்வியங்காடு கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து 50 m தொலைவில் 2 பரப்பு 2.94 குளி உடைய காணி விற்பனைக்குண்டு.
074 197 2649

**ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்**



தோற்றம் 07 . 08 . 1950
மறைவு 08 . 07 . 2023

கடந்த 08.07.2023 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தின் ஆணிவேராய் இருந்து சாய்ந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் ஏகாம்பரம் ஜெயக்குமார்**

(உரிமையாளர் – City Tex மற்றும் JPY Fashion Club)

*திதி: ஆனிமாத தேய்பிறை சஷ்டி*

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை பஜனையும், திருவுருவப் படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும் நாளை (09.08.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்** நடைபெற்று பின்னர் மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், எமக்குப் பலவழிகளிலும் உதவி புரிந்த நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

"பயன்தூக்கார் செய்த உதவி - நயன் தூக்கின் நன்மை கடலின் பெரிது"

இல.465/16,
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(CS/51442)AH-1
குடும்பத்தினர்.
021 222 1445




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org